(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2021 |
| Deposition Of Witness for | : | PW3 |
| Name | : | **Thiru.P.Mohandass Sowmiyan** |
| Father's Name | : | Thiru.S.Paul |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **23rd October 2025.**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி வருகிறேன். 2020–ம் ஆண்டு சிவகங்கை, வேளாண்மை

இணை இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்மை உதவி இயக்குநராக(தரக்கட்டுப்பாடு) பணியாற்றினேன். 13.02.2020 அன்று வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கடித எண். ப.நி.1/5/2020, நாள்.13.02.2020 மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்களின் கடித நாள்.13.02.2020–ன் படி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை அலுவலகத்திற்கு அரசு சாட்சியாக வரச்சொல்லியிருந்தார்கள். அதன்படி நான் அன்று காலை 10.15 மணிக்கு சிவகங்கை, ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்களை சந்தித்தேன். வேளாண்மை இணை இயக்குநர், சிவகங்கை அவர்கள் 13.02.2020–ம் தேதியிட்ட கடிதத்தின்படி என்னை சிவகங்கை, ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் நிலையத்திற்கு செல்லுமாறு வாய்மொழியாக அறிவுறுத்தினார். நான் எனது மேல் அதிகாரியின் அறிவுறுத்தலின்படியும் நான் சிவகங்கை, ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் நிலையத்திற்கு காலை 10.15 மணிக்கு சென்றேன்.

2. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்தார். அலுவலகத்தின் வெளியில் இருந்த நபரிடம் கேட்டேன். அவர் என்னை துணை கண்காணிப்பாளர்

அறைக்கு அனுப்பி வைத்தார். துணை கண்காணிப்பாளரிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டேன். வழக்கு எண்.1/2020 வழக்கில் அரசு சாட்சியாக இருப்பதற்காகத்தான் என்னை அழைத்திருப்பதாக கூறினார். நான் அங்கு இருக்கும்போது மற்றொரு நபர் அலுவலகத்திற்குள் வந்தார். அவரை எனக்கு காவல் துணை கண்காணிப்பாளர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவருடைய பெயர் திரு.த.கார்த்திகேயன் என்றும் அவர் இளநிலை உதவியாளராக கால்நடை பராமரிப்பு மற்றும் தீவன அபிவிருத்தி, சிவகங்கையில் பணிபுரிவதாகவும் கூறினார். அவரும் அரசு சாட்சியாக இருப்பதற்குதான் அங்கு வந்திருப்பதாக கூறினார்.

3. அந்த சமயத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் அறையில் ஏற்கனவே அமர்ந்திருந்த காரைக்குடி, இலுப்பைக்குடி கிராமத்தினை சேர்ந்த திரு.சுப்பு என்பவரை எங்கள் இருவருக்கும் காவல் துணை கண்காணிப்பாளர் அறிமுகம் செய்து வைத்தார். அவர் கொடுத்த புகாரின் அடிப்படையிலேயே குற்ற எண்.1/2020 பதிவு செய்யப்பட்டிருப்பதாக காவல் துணை கண்காணிப்பாளர் தெரிவித்தார். முதல் தகவல் அறிக்கையின் நகலை எங்களிடம் கொடுத்து அரசு சாட்சிகளான எங்கள் இருவரையும் படித்துப்பார்க்கச்சொன்னார். முதல் தகவல் அறிக்கையில்

பதிவு செய்யப்பட்ட சங்கதிகள் யாவும் உண்மைதானா என அன்று அவரிடம் கேட்டோம். அதற்கு அவர் முழுவதும் உண்மைதான் என்றும் தான் வங்கியில் லோன் வாங்குவதற்காக வருமானச்சான்று பெறுவதற்காக காரைக்குடியில் உள்ள ஒரு தனியார் internet மையத்தில் விண்ணப்பம் செய்ததாக கூறினார்.

4. அதில் தங்கள் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72000/- என குறிப்பிட்டிருந்ததாகவும் தெரிவித்தார். இந்த சம்பவம் நடந்தது 06.02.2020 ஆகும். அதன்பின் வருமான சான்று சம்பந்தமாக சாக்கோட்டை வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களை 10.02.2020 அன்று சந்திக்கச் சென்றார். அப்போது விண்ணப்பத்திற்கான ரசீதை காண்பித்து வருமானச்சான்று கேட்டதாகவும் கூறினார். ஆண்டு வருமானம் எவ்வளவு குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சுப்புவிடம் கேட்டதற்கு ரூ.72000/- என்று குறிப்பிட்டதாகவும், அதற்கு வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா ரூ.96000/- என குறிப்பிட்டு தருவதாகவும், அதற்கு லஞ்சப் பணம் ரூ.1000/- கொடுத்தால்தான் வருமானச்சான்று தரமுடியும் என்று திருமதி.ஜீவா தெரிவித்ததாகவும் அதற்கு உடனடியாக திரு.சுப்பு அவர்கள் லஞ்சப்பணம் கொடுக்க விரும்பாததால் சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து 13.02.2020 அன்று காலை 8.30 மணியளவில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் வருமானச்சான்று வழங்குவதற்கு லஞ்சப்பணம் ரூ.1000/– கேட்ட வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரிபுகார் மனு அளித்துள்ளார்.

5. அப்போது லஞ்சமாக வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களுக்கு கொடுப்பதற்கு ரூ.1000/– கொண்டு வந்ததாக காவல் துணை கண்காணிப்பாளரிடம் தெரிவித்தார். அப்போது காவல் துணை கண்காணிப்பாளர் சொன்ன உத்தரவின்பேரில் இரண்டு ரூ.500/– நோட்டுகளை அரசு சாட்சி திரு.கார்த்திகேயன் அவர்களிடம் கொடுத்து எண்ணிப்பார்க்கச் சொன்னார். எண்ணிப்பார்த்ததில் இரண்டு ரூ.500/– என மொத்தம் ரூ.1000/– இருந்தது. அப்போது காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தின் முதல்நிலை காவலர் திரு.மது அவர்கள் Disposable Transparent Cup–ல் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். அப்போது திரு.கார்த்திகேயன் அரசு சாட்சி அவர்களை தனது வலது கையை அந்த சோடியம் கார்பனேட் கரைசலில் நனைக்கச் சொன்னார். அந்த கரைசலில்

எந்த வித நிறமாற்றமும் ஏற்படவில்லை. அதேபோல் அவரது இடது கை விரல்களையும் மற்றொரு டம்ளரில் தயார் செய்து வைக்கப்பட்டிருந்த சோடியம் கார்பனேட் கரைசலில் நனைக்கச்சொன்னார். அப்போதும் எவ்வித நிறமாற்றமும் ஏற்படவில்லை. பின்னர் முதல் நிலை காவலர் திரு.மது அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுபடி இரண்டு ரூ.500/– நோட்டுகளிலும்இருபுறமும் முன்னும் பின்னும் பினாப்தலீன் பவுடரை சீராக தடவினார். அதன்படி பினாப்தலீன் தடவிய இரண்டு ரூ.500/– நோட்டுகளையும் திரு.கார்த்திகேயன் என்பவரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கி வாதி திரு.சுப்பு அவர்களின் இடது பக்க மேல் சட்டை பாக்கெட்டில் எவ்வித பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதிபடுத்திக்கொண்டு சட்டைப் பையில் வைத்தார்.

6. பின்பு திரு.கார்த்திகேயன் அவர்களை சோடியம் கார்பனேட் கரைசல் கலந்த கரைசலில் வலது கையை நனைக்கச் சொல்லும் போது அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அதுபோலவே இடது கை விரல்களை சோடியம் கார்பனேட் கரைசலில் நனைக்கும் போது அதுவும் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. பின்பு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சோதனையின் முக்கியத்துவத்தை வாதிக்கும் அரசு சாட்சியான

இருவருக்கும் எடுத்துரைத்தார். பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் வாதி சுப்புவிடம் தாங்கள் சட்டைப் பையில் வைத்துள்ள பினாப்தலீன் தடவப்பட்ட ரூ.1000/-ஐ சாக்கோட்டை வருவாய் ஆய்வாளர் அலுவலகம் சென்று வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்கள் லஞ்சப்பணம் வேண்டும் என்று கேட்டால் மட்டுமே பினாப்தலீன் தடவப்பட்ட ரூ.1000/-ஐ கொடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார். பின்பு அவர் பணம் பெற்றுக்கொண்டால் அலுவலகத்தினைவிட்டு வெளியே வந்து சுப்பு அணிந்திருந்த முழுக்கைச்சட்டையில் இடது கை மடிப்பை இறக்கிவிட்டு சைகை காட்ட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். பின்பு என்னிடம் வாதி சுப்புவுடன் சென்று சுப்புவிற்கும் வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களுக்கும் இடையே நடக்கும் உரையாடல்கள் மற்றும் நடவடிக்கைகளை கேட்டு கண்காணித்து தெரிவித்திட அறிவுறுத்தினார். அதற்கு பின்பு ஏற்கனவே சோதனைக்காக தயார் செய்யப்பட்ட கரைசல்களை கீழே கொட்டி அழிக்கப்பட்டது. Disposable cup-களும் கிழித்து குப்பையில் போடப்பட்டது. முதல் நிலை காவலர் மதுவும் அரசு சாட்சியான திரு.கார்த்திகேயன் அவர்களும் சோப்பு கரைசலில் நன்றாக கைகளை கழுவினர். இதற்கு பயன்படுத்தப்பட்ட பினாப்தலீன் பவுடர்

காவல் துணை கண்காணிப்பாளர் அறையில் வைத்து பூட்டப்பட்டது.

7. அரசு சாட்சியான திரு.கார்த்திகேயன் அவர்களை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தன்னுடன் வருமாறு கேட்டுக்கொண்டார். சோதனை மேற்கொண்ட முதல் நிலை காவலர் திரு.மது அவர்களை சிவகங்கை, ஊ.த.க பிரிவு அலுவலகத்திலேயே இருந்தவிடச் சொன்னார். இது சம்பந்தமான ஒப்படைப்பு மகஜர் காலை 10.15 மணிக்கு ஊ.த.க பிரிவு காவலர் திரு.கண்ணன் அவர்கள் மூலம் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். இந்நிகழ்வு காலை 11.00 மணிக்கு நிறைவுபெற்றது. ஒப்படைப்பு மகஜரில் ரூபாய் நோட்டுகளின் வரிசை எண்கள் குறிக்கப்பட்டது. ஒப்படைப்பு மகஜரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். ஒப்படைப்பு மகஜர் நான்கு பக்கங்களிலும் நானும், மற்றொரு அரசு சாட்சி கார்த்திகேயன், காவல் துணை கண்காணிப்பாளர், வாதி சுப்பு ஆகிய நால்வரும் ஒவ்வொரு பக்கங்களிலும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்படைப்பு மகஜரின் நான்கு பக்கங்களிலும் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். ஒப்படைப்பு மகஜர் அ.த.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள எனது(**அ.சா.3) கையொப்பங்கள் மட்டும் அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. ஒப்படைப்பு மகஜில் குறிப்பிட்ட திட்டமிடல்படி காலை 11.30 மணிக்கு அரசு நான்கு சக்கர வாகனத்தில் நானும், மற்றொரு அரசு சாட்சி மற்றும் மகளிர் காவல் பிரிவு சார்பு ஆய்வாளர் திருமதி.சேதுபாமா அவர்களும் மற்றும் தலைமை காவலர் திருமதி.சங்கீதா அவர்களும் மற்றும் போலிஸ் பார்ட்டியினருடன் சாக்கோட்டை வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு அரசு பொலிரோ ஜீப்பில் செல்லக் கிளப்பினோம். அப்போது சுமார் 1.30 மணிக்கு புதுவயல் பேருந்து நிலையம் அருகில் வாதி சுப்புவையும், என்னையும் இறக்கிவிட்டு வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு நடந்து செல்லுமாறும், ஏற்கனவே கூறிய அறிவுறைகளை ஞாபகப்படுத்தி அறிவுறுத்தினார். நாங்களும் நடந்து சென்றோம். காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் போலிஸ் பார்ட்டியினர் எங்களை பின்தொடர்ந்து வந்த மறைந்து நின்று கண்காணித்தார்கள். நானும் வாதி சுப்புவும் மதியம் 1.45 மணிக்கு வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குள் சென்றோம்.

8. அங்கு வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா கிழக்கு பக்கமாக பார்த்து அமர்ந்திருந்தார். அவருக்கு முன்னால் ஒரு மேஜை விரிப்புடன் கூடிய டேபிள் இருந்தது. வருவாய் ஆய்வாளரை என்னால் அடையாளம்

காண்பிக்க இயலும். நான் அவரை இந்நீதிமன்றத்தில் இன்று பார்க்கவில்லை. அப்போது திரு.சுப்பு அவர்கள் வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களிடம் வருமானச்சான்று பற்றி கேட்டார். அப்போது திருமதி.ஜீவா அவர்கள் தான் கேட்ட லஞ்சப்பணம் ரூ.1000/– கொண்டு வந்தீர்களா என்று கேட்டார். அதற்கு சுப்பு தன் இடது சட்டைப் பாக்கெட்டிலிருந்து பினாப்தலீன் பவுடர் தடவப்பட்ட இரண்டு ரூ.500/– நோட்டுகளை எடுத்து திருமதி.ஜீவா அவர்களிடம் கொடுத்தபோது அதை திருமதி.ஜீவா அவர்கள் தனது வலது கையால் வாங்கி தனக்கு முன்பாக இருந்த மேஜையின் மீது விரிக்கப்பட்டிருந்த விரிப்பின் மீது வைத்தார். அப்போது INTERNET SPEED SLOW ஆக உள்ளது எனவும் அது சரியான பின்பு தாசில்தாருக்கு அனுப்பி வைப்பதாக கூறினார். உடனடியாக நானும் சுப்புவும் 1.55 மணிக்கு அலுவலகத்தினை விட்டு வெளியே வந்தோம். அப்போது சுப்பு வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா பணம் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக தனது இடது முழுக்கைச் சட்டையின் மடிப்பினை இறக்கிகாட்டி சைகை செய்தார். இதனை பார்த்து காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் திருமதி.சேதுபாமா மற்றும் முதல் நிலை காவலர் திருமதி.சங்கீதா மற்றொரு

அரசு சாட்சியான திரு.கார்த்திகேயன் மற்றும் போலிஸ் பார்ட்டியினர் வந்து சுப்புவிடம் நடந்தது பற்றி விசாரித்தனர். என்னிடமும் நடந்த விபரத்தினை கேட்டு அறிந்தனர். உடனே, காவல் துணை கண்காணிப்பாளர் சுப்புவையும், என்னையும் அரசு சாட்சியான கார்த்திகேயன் மற்றும் சார்பு ஆய்வாளர் திருமதி.சேதுபாமா மற்றும் முதல் நிலை காவலர் திருமதி.சங்கீதா அவர்களையும் அலுவலகத்திற்குள்ளே அழைத்துக்கொண்டு சென்றார். திரு.சுப்பு அவர்கள் வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அடையாளம் காட்டினார். அப்போது காவல் துணை கண்காணிப்பாளர் என்னையும் மற்றொரு அரசு சாட்சி மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு பெண் காவலர்களையும் வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

9. அப்போது திருமதி.ஜீவா அவர்கள் பதற்றமாக காணப்பட்டார். அவர்களை காவல் துணை கண்காணிப்பாளர் அவரை ஆசுவாசப்படுத்தி அவரது இருக்கையில் அமரச்செய்தார். அப்போது புகார்தாரர் திரு.சுப்புவை வெளியே செல்ல சொன்னதை அடுத்து அவரும் அலுவலகத்தினை விட்டு வெளியே சென்றுவிட்டார். அப்போது அங்கு கிராம நிர்வாக அலுவலர் திருமதி.C.முத்துமாரி, பானாவயல் குரூப் அவர்கள் அலுவலகத்தில் பின்புறம்

உள்ள அறையில் இருந்ததாக தெரிவித்தார். என்ன காரணத்திற்காக அங்கு வந்தார் என்று கேட்டபோது IGONAP LIST கொடுப்பதற்காக வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும், வருவாய் ஆய்வாளர் லஞ்சம் பெற்றபோது தான் அங்கு இல்லை எனவும், பின் அறையில் இருந்ததாகவும் கூறினார். அவரையும் இந்த நிகழ்வில் நடக்கும் பொறிவைப்பு நடவடிக்கையை எடுத்துகூறி நடக்கவிருக்கும் நிகழ்வினை கவனித்து ஒரு சாட்சியாக இருக்குமாறு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதையடுத்து அவரும் அதை ஏற்றுக்கொண்டார்.

10. ஊ.த.க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் தலைமை காவலர் திரு.விஜயகுமார் அவர்கள் 180 மிலி கொள்ளளவு கொண்ட ஒரு கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். திருமதி.ஜீவா அவர்களின் வலது கையை அதில் நனைத்தபோது அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அந்த கரைசலை சுத்தமான கண்ணாடி பாட்டிலில் நிரப்பி துணி மற்றும் நூலால் சுற்றி, வழக்கு விபரங்களை குறிப்பிட்டு சீல் வைக்கப்பட்டு 'R' RIGHT HAND ACCUSED TMT.C.JEEVA என்று குறிப்பிட்டு லேபிள் ஒட்டப்பட்டது. அதில்

நானும் காவல் துணை கண்காணிப்பாளர், மற்றொரு அரசு சாட்சி கார்த்திகேயன் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஜீவா என நான்கு பேரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கரைசல் உள்ளடங்கிய பாட்டிலில் ஒட்டப்பட்ட லேபிளில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த **பாட்டில் அ.த.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றொரு கண்ணாடி டம்ளரில் தலைமை காவலர் திரு.விஜயகுமார் அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். திருமதி.ஜீவா அவர்களின் இடது கை விரல்களை நனைக்கும்படி அறிவுறுத்தினார். அப்போது கை விரல்களை நனைத்தபோது நிறமாற்றம் சரியாக தெரியவில்லை. உடனே அந்த கரைசலை ஒரு சுத்தமான கண்ணாடி பாட்டிலில் நிரப்பி துணி மற்றும் நூலால் சுற்றி, வழக்கு விபரங்களை குறிப்பிட்டு சீல் வைக்கப்பட்டு 'L' LEFT HAND ACCUSED TMT.C.JEEVA என்று குறிப்பிட்டு லேபிள் ஒட்டப்பட்டது. அதில் நானும் காவல் துணை கண்காணிப்பாளர், மற்றொரு அரசு சாட்சி கார்த்திகேயன் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஜீவா என நான்கு பேரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கரைசல்

உள்ளடங்கிய பாட்டிலில் ஒட்டப்பட்ட லேபிளில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த **பாட்டில் அ.த.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதனையடுத்து லஞ்சப்பணமாக பெற்ற பணம் ரூ.1000/- எங்கே என்று கேட்டு அதனை எடுத்துதர காவல் துணை கண்காணிப்பாளர் தெரிவித்ததையடுத்து திருமதி.ஜீவா தன் மேஜை விரிப்பின் மேலிருந்து பச்சை மஞ்சள் நிறமுள்ள ANGRY BIRD என்று எழுதப்பட்டிருந்த மேஜை விரிப்பின் மீதிருந்த இரண்டு ரூ.500/- நோட்டுக்களான மொத்தம் ரூ.1000/-ஐ எடுத்து கொடுத்ததை அரசு சாட்சி திரு.கார்த்திகேயன் அவர்கள் எண்ணிப்பார்த்து ஒப்படைப்பு மகஜரில் குறிப்பிடப்பட்ட எண்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தார், அது சரியாக இருந்தது. அதனையடுத்து திருமதி.ஜீவா அவர்கள் மேஜை விரிப்பில் ரூபாய் நோட்டுகள் வைக்கப்பட்டிருந்த பகுதியை திரு.விஜயகுமார், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுபடி சுத்தமான கண்ணாடி டம்ளரில் தயார் செய்த சோடியம் கார்பனேட் கரைசலில் மேஜை விரிப்பினை திருமதி.ஜீவா அவர்களை நனைத்திட கூற அவர் நனைத்தபோது அந்த கரைசல் இளம்பச்சை நிறமாக மாறியது. அந்த கரைசலை சுத்தமான கண்ணாடி பாட்டிலில் நிரப்பி துணி மற்றும் நூலால் சுற்றி, வழக்கு

விபரங்களை குறிப்பிட்டு சீல் வைக்கப்பட்டு 'C' TABLE CLOT என்று குறிப்பிட்டு லேபிள் ஒட்டப்பட்டது. அதில் நானும் காவல் துணை கண்காணிப்பாளர், மற்றொரு அரசு சாட்சி கார்த்திகேயன் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஜீவா என நான்கு பேரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கரைசல் உள்ளடங்கிய பாட்டிலில் ஒட்டப்பட்ட லேபிளில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த **பாட்டில் அ.த.சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ANGRY BIRD **என்று எழுதப்பட்ட சிவப்பு, மஞ்சள், பச்சை நிறம் கொண்ட மேஜை விரிப்பு அ.த.சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்போது மகளிர் காவல் பிரிவு சார்பு ஆய்வாளர் திருமதி.சேதுபாமா அவர்களும் மற்றும் தலைமை காவலர் திருமதி.சங்கீதா அவர்களும் சுமார் 3.15 மணியளவில் திருமதி.ஜீவா அவர்களை கைதுக்கான காரணம்கூறி கைது செய்தனர்.

11. அந்த சமயம் மேற்படி இரண்டு ரூ.500/- நோட்டுக்கள், சோதனைக் கரைசல்கள் உள்ளடங்கிய பாட்டில்கள்-3, ANGRY BIRD என்று எழுதப்பட்ட சிவப்பு, மஞ்சள், பச்சை நிறம் கொண்ட மேஜை விரிப்பு ஆகியவற்றை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கைப்பற்றினார். இந்த நிகழ்வினை கைப்பற்றுதல் மகஜராக திரு.கண்ணன், முதல் நிலை

காவலர் அவர்கள் மடிக்கணினியில் காவல் துணை கண்காணிப்பாளர் சொல்லச் சொல்ல தட்டச்சு செய்து PRINT எடுக்கப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் மற்றொரு அரசு சாட்சி திரு.கார்த்திகேயன், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா மற்றும் கிராம நிர்வாக அலுவலர் C.முத்துமாரி அவர்களும் மொத்தம் 5 பக்கங்களிலும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரின் 5 பக்கங்களிலும் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ–5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த நிகழ்வு மதியம் 2.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 4.20 மணிக்கு முடிக்கப்பட்டது. பின்பு மாலை 4.30 மணியளவில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் குற்ற எண்.1/2020 நடைபெற்ற இடத்தினை மாதிரி வரைபடமாகவும், பார்வை மகஜரும் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் இரண்டு பக்கங்களிலும் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் காவல் துணை கண்காணிப்பாளர், மற்றொரு அரசு சாட்சி ஆகியோர் கையொப்பம் செய்தார். அந்த நிகழ்வு 4.30 மணிக்கு ஆரம்பித்து 5.30

மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த பார்வை மகஜரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. அதனை தொடர்ந்து வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்கள் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள காளியம்மன் கோவில் தெருவில் உள்ள குடியிருக்கும் அவரது வீட்டிற்கு இந்த குற்ற வழக்கு சம்பந்தமாக ஏதாவது ஆவணம் கிடைக்குமா என்று ஆய்வு செய்ய அரசு வாகனத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும், நானும் மற்றொரு அரசு சாட்சியும் சென்றோம். இரவு 7.00 மணி முதல் அவரது வீட்டை சோதனை செய்த போது எந்த பொருட்களும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் கைப்பற்றப்படவில்லை. சோதனையின்போது திருமதி.ஜீவா அவர்களின் கணவர் திரு.கண்ணன் அவர்கள் உடனிருந்தார். அவரிடம் சோதனை செய்வதற்கான ஜாவிதாவினை நானும் மற்றொரு அரசு சாட்சி திரு.கார்த்திகேயன் அவர்களும் கையொப்பமிட்டு திரு.கண்ணன் அவர்களிடம் வழங்கினோம். அதில் திரு.கண்ணன் அவர்களும் கையொப்பம் செய்தார். சோதனை ஜாவிதாவில் 5வது COLUMN–ல் உள்ள 1வது கையொப்பம்

என்னுடையதுதான். **சோதனை ஜாவிதா அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்பு காவல் துணை கண்காணிப்பாளர், நான், மற்றொரு அரசு சாட்சி கார்த்திகேயன் ஆகியோர்கள் திருமதி.ஜீவா அவர்களுடன் சுமார் 8.30 மணிக்கு அரசு வாகனத்தில் சிவகங்கை, ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு வந்தோம். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி நான் எனது வீட்டிற்கு திரும்பிச்சென்றேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஊ.த.க பிரிவு சிவகங்கை, காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.10.23 16:44:33 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.